தேர்தல் புறக்கணிப்பு அறிவித்த கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை

போடி, மார்ச் 24: போடி அருகே தேர்தல் புறக்கணிப்பு அறிவித்த கரட்டுப்பட்டி கிராம மக்களிடம் தினமணி செய்தி எதிரொலியாக வருவாய்த் துறை, காவல் துறையினர் செவ்வாய்க்கிழமை சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தேனி மாவட்டம், போடி அருகே உள்ளது கரட்டுப்பட்டி கிராமம். மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சிக்குள்பட்ட இந்தக் கிராமத்தில் மலை மாடுகள் அதிகமாக வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். மலை மாடுகளை மேய்ச்சலுக்கு வனப் பகுதியில் அனுமதிக்க வனத் துறையினர் மறுத்து வருவதுடன் கிராம மக்கள் மீது வழக்குப் பதிவு செய்வதாக கிராம மக்கள் அதிருப்தி தெரிவித்தனர். கரட்டுப்பட்டி கிராமம் அருகே செல்லும் 18-ஆம் கால்வாய் நீட்டிப்பு தண்ணீரை வைத்து இந்தப் பகுதியில் புதிதாக கண்மாய் அமைத்து நீர் வசதி செய்து கொடுத்தால் மாடுகளுக்கும், கிராமத்துக்கும் தண்ணீர் வசதி கிடைக்கும். இதேபோல, கிராமத்தில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, கழிவு நீர் வடிகால் வசதி செய்து தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகவும், தங்கள் கிராமத்துக்கு யாரும் வாக்கு கேட்டு வர வேண்டாம் என்றும் தெரிவித்து அறிவிப்புப் பதாகை வைத்திருந்தனர். இதுகுறித்து தினமணி தேர்தல் பக்கத்தில் செய்தி வெளியாகியிருந்தது. இதையடுத்து, கிராம மக்களிடம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர். இதையடுத்து, செவ்வாய்க்கிழமை போடி வட்டாட்சியர் அலுவலகத்தில் கரட்டுப்பட்டி கிராம மக்களுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. போடி வட்டாட்சியர் டி.சந்திரசேகரன், போடி காவல் துணைக் கண்காணிப்பாளர் டி.முருகன், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி அலுவலர் சிவக்குமார் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் தேர்தல் முடிந்தவுடன் அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும், மற்ற கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் அதிகாரிகள் உறுதி கூறினர். ஜனநாயகக் கடமையான தேர்தலில் வாக்களிப்பதை கிராம மக்கள் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

கிராம மக்கள் சிலர் மட்டுமே வந்துள்ளதால் கிராம மக்களிடம் ஆலோனை செய்துவிட்டு தேர்தல் புறக்கணிப்பை ரத்து செய்வது குறித்து அறிவிப்பதாகக் கூறிச் சென்றனர்.

போடியில் தேர்தல் புறக்கணிப்பு அறிவித்த கரட்டுப்பட்டி கிராம மக்களுடன் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தை.

திண்டுக்கல் மாநகராட்சியில் ஒரே நாளில் ரூ.1.36 கோடி வரி வசூல்!

திண்டுக்கல், மார்ச் 24: மத்திய அரசின் ஊக்க நிதி ரூ.18 கோடியை பெறுவதை உறுதி செய்யும் வகையில், திண்டுக்கல் மாநகராட்சி அலுவலர்கள் ஒரே நாளில் ரூ.1.36 கோடி வசூலித்து சாதனை படைத்தனர்.

பொதுமக்களிடமிருந்து சொத்து வரி, குடிநீர்க் கட்டணம், புதை சாக்கடை கட்டணம், தொழில் வரி போன்றவை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வசூலிக்கப்படுகின்றன. இதில் சொத்து வரியை மட்டும் நிலுவையின்றி, ஆண்டுதோறும் 100 சதவீதம் வசூலிக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசு சார்பில், மாநில அரசு வழியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்க நிதி வழங்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாநகராட்சிக்கு 2023-24, 2024-25-ஆம் நிதி ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இந்த சொத்து வரி இலக்கு முழுமையாக வசூலிக்கப்பட்டு, மத்திய அரசின் ஊக்க நிதி முறையே ரூ.10 கோடி, ரூ.16 கோடி பெறப்பட்டது.

நிகழாண்டுக்கான சொத்து வரி கேட்பு ரூ.30.63 கோடி: திண்டுக்கல் மாநகராட்சியைப் பொருத்தவரை, 48 ஆயிரம் வீடுகள், 412 அரசு அலுவலகங்கள் உள்பட மொத்தம் 48,500 கட்டடங்களுக்கு சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. இந்த இனங்களில் ரூ.30.63 கோடி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆண்டுதோறும் மார்ச் மாதம் வரை வரி வசூலுக்கு கால அவகாசம் அளிக்கப்படும் நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலை கணக்கில் கொண்டு கடந்த ஜூன் மாதமே வரி வசூலை தீவிரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிகள் காரணமாக, வரி வசூலில் தொய்வு ஏற்பட்டது. மேலும், சட்டப்பேரவைத் தேர்தல் நேரத்தில் அரசியல் நிர்பந்தங்களால், வரி வசூலை தீவிரமாக மேற்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டது. ஆனாலும், மத்திய அரசின் ஊக்க நிதி ரூ.18 கோடியை பெறுவதற்கான இலக்கை எட்ட வேண்டிய கட்டாயம் மாநகராட்சிக்கு இருந்து வருகிறது.

ஒரே நாளில் ரூ.1.36 கோடி வரி வசூல்: இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் மட்டும் சொத்து வரி, குடிநீர் வரி, தொழில் வரி உள்ளிட்ட இனங்களில் ரூ.1.36 கோடி வசூலித்து மாநகராட்சி அலுவலர்கள் சாதனை படைத்தனர். குறிப்பாக, ரூ.30.63 கோடி சொத்து வரி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், திங்கள்கிழமை வரை ரூ.28.21 கோடி மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்தது. செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் சொத்து வரியில் ரூ.1.29 கோடி வசூலிக்கப்பட்டது. எனினும், இலக்கை எட்டுவதற்கு மேலும் ரூ.1.13 கோடியை அடுத்த 5 நாள்களுக்குள் வசூலிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநகராட்சி அலுவலர்கள் கூறியதாவது:

திண்டுக்கல் மாநகராட்சி வரலாற்றில் ஒரே நாளில் ரூ.1.36 கோடி வரி வசூல் என்பது தேர்தல் நெருக்கடிக்கு மத்தியிலும் சாத்தியமாகி உள்ளது. தற்போது வரை சொத்து வரியில் ரூ.29.50 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூ.1.13 கோடியையும் வசூலித்து, மத்திய அரசிடமிருந்து ரூ.18 கோடி ஊக்க நிதி பெறுவது உறுதிப்படுத்தப்படும் என்றனர்.

சாணார்பட்டி அருகே நாட்டுத் துப்பாக்கியால் சுட்டதில் இளைஞர் காயம்

நத்தம், மார்ச் 24: திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகே ஞாயிற்றுக்கிழமை கீழே கிடந்த நாட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டதில் இளைஞர் காயமடைந்தார்.

சிகிச்சை பெற்று வரும் யுவராஜா.

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகேயுள்ள அய்யாபட்டியை அடுத்த பெரியகோம்பைபட்டியைச் சேர்ந்த யுவராஜா, அவரது தம்பி சதீஷ்குமார் (19), உறவினர் சக்திவேல் (19). தேங்காய் உறிக்கும் தொழிலாளர்களான இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுமலை அடிவாரப் பகுதியில் புளியம்பழம் பறிக்கச் சென்றனர்.

அப்போது, ஒரு மரத்தடியில் துணியால் சுற்றப்பட்ட நிலையில், நாட்டுத் துப்பாக்கி இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, இதை எடுத்த சதீஷ்குமார் சுட முயற்சித்தபோது, தவறுதலாக அதிலிருந்த பால்ரஸ் குண்டுகள் அருகில் நின்ற யுவராஜாவின் இடுப்பு, தொடைப் பகுதியில் பாய்ந்தன. இதில் காயமடைந்த யுவராஜா திண்டுக்கல் அருகேயுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து தகவலறிந்த சாணார்பட்டி போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும், சதீஷ்குமார், சக்திவேலிடம் விசாரணை நடத்தி, நாட்டுத் துப்பாக்கியைப் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக சாணார்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் பிரபாகரன் வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகிறார்.

பழனி, திருஆவினன்குடி கோயில்களின் உண்டியல் காணிக்கை ரூ. 3.53 கோடி

பழனி, மார்ச் 24: பழனி தண்டாயுதபாணி சுவாமி, திருஆவினன்குடி கோயில்களின் உண்டியல் காணிக்கை வரவாக ரூ.3.53 கோடி கிடைத்தது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் வைக்கப்பட்டுள்ள உண்டியல்கள் பக்தர்கள் கூட்டத்தால் 25 நாள்களில் நிரம்பியது. இதையடுத்து, உண்டியல்கள் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டு காணிக்கைகள் எண்ணப்பட்டன. முதல் நாள் எண்ணிக்கையில் பக்தர்களின் காணிக்கை வரவாக ரூ. 3 கோடியே 36 லட்சத்து 70 ஆயிரத்து 630-ம், தங்கம் 576 கிராமும், வெள்ளி 8 ஆயிரத்து 886 கிராமும் கிடைத்தது. இதைத் தவிர, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, மியான்மர் உள்ளிட்ட வெளிநாட்டு கரன்சிகள் 1,630-ம் கிடைத்தன.

இதேபோல, பழனி திருஆவினன்குடி கோயில் உண்டியல்கள் மூலம் ரூ. 16 லட்சத்து 55 ஆயிரத்து 35 காணிக்கையாகக் கிடைத்தது. காணிக்கைகளை எண்ணும் பணியில் பழனி கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, திண்டுக்கல் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் நாகவேல் ஆகியோர் முன்னிலையில் பழனியாண்டவர் கல்லூரி மாணவிகள், கோயில் அலுவலர்கள், வங்கிப் பணியாளர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர்.

பழனி மலைக் கோயிலில் செவ்வாய்க்கிழமை உண்டியல் காணிக்கைகளை எண்ணும் பணியில் ஈடுபட்ட கல்லூரிப் பேராசிரியைகள், அலுவலர்கள்.

குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் மூவர் கைது

திண்டுக்கல், மார்ச் 24: வத்தலகுண்டு பகுதியில் கொலை வழக்கில் தொடர்புடைய 3 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் செ. சரவணன் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டை அடுத்த கட்டக்காமன்பட்டியைச் சேர்ந்த மு. சாந்தக்குமார் (23), லோ. யோகேஸ்வரன் (23), ப. சரவணன் (28) ஆகிய மூவரும் இணைந்து கடந்த பிப். 17-ஆம் தேதி ஒருவரை வெட்டிக் கொலை செய்தனர். இவர்கள் மூவர் மீதும் ஏற்கெனவே பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தன.

இந்த நிலையில், கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தக்குமார், யோகேஸ்வரன், சரவணன் ஆகியோரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆ. பிரதீப் பரிந்துரைத்தார்.

இதை ஏற்று மாவட்ட ஆட்சியர் செ. சரவணன் அதற்கான உத்தரவை செவ்வாய்க்கிழமை பிறப்பித்தார்.

மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் - சென்னை அமர்வு முன்பாக

CP(CAA)/11/CHE/2026 உடன்

CA(CAA)/82/CHE/2025

கார்டான் புளூ புராப்பர்ட்டீஸ் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (Cordon Bleu Properties and Infrastructures Private Limited) (மாற்றத்துக்குட்படும் நிறுவனம்) மற்றும் கிளாசிக் நிட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Classic Knits India Private Limited) (மாற்றம் ஏற்கும் நிறுவனம்) இடையிலான இணைப்புத் திட்டம் தொடர்பாக.

கிளாசிக் நிட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
(CLASSIC KNITS INDIA PRIVATE LIMITED),
CIN:U18101TZ2010PTC015783,
பதிவு அலுவலக முகவரி: 43, ஜெயலட்சுமி ஜின்னிங் ஃபேக்டரி காம்பவுண்ட் ஆலங்காடு, மங்கலம் ரோடு, திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா – 641 604.
பிரதிநிதியாக அதன் இயக்குநர் : திரு.புதுவலசு நல்லசாமி குமரேசன்
(DIN: 01837259) ..... மனுதாரர் எண்.1 / மாற்றம் ஏற்கும் நிறுவனம்

கார்டான் புளூ புராப்பர்ட்டீஸ் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
(CORDON BLEU PROPERTIES AND INFRASTRUCTURES PRIVATE LIMITED),
CIN: U45201TZ2008PTC014498,
பதிவு அலுவலக முகவரி: எண்.1/9, குள்ளே கவுண்டன் புதூர், மங்கலம் ரோடு, திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா – 641 687.
பிரதிநிதியாக அதன் இயக்குநர் : திரு.செந்தில் குமார் வெங்கடரமணசாமி
(DIN: 01837244) ..... மனுதாரர் எண்.2 / மாற்றத்துக்குட்படும் நிறுவனம்
(இனி இவை மொத்தமாக "மனுதாரர் நிறுவனங்கள்" என்று அழைக்கப்படும்)

மனு விசாரணை அறிவிப்பு

நிறுவன (ஒத்துப்போதல், ஏற்பாடுகள் மற்றும் இணைப்புகள்) விதிகள் 2016ன் விதி 16ன் கீழானது)

மேற்குறிப்பிட்டவாறான கூட்டு விண்ணப்பம் நிறுவனச் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 உடன் 232ன் கீழ் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வின் முன் கிளாசிக் நிட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் கார்டான் புளூ புராப்பர்ட்டீஸ் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை இணைக்கும் திட்டத்தை அனுமதிக்கக் கோரும் மனு மீதான அறிவிப்பு வெளியிடப்படுகிறது. மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் தனது **05.03.2026** நாளிட்ட உத்தரவின்படி, மேற்குறிப்பிட்ட மனு மீதான விசாரணைக்கு **22.04.2026** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களின் கூட்டு விண்ணப்ப நகல் ஏற்கனவே சட்டபூர்வ ஆணைக்குழுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனங்களின் கூட்டு விண்ணப்பத்துக்கு எதிர்ப்பு / மறுப்பு தெரிவிக்க விரும்பும் எந்த ஒரு நபரேனும் தங்களது எதிர்ப்பு மனுக்கான மனுதாரர் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு கீழே குறிப்பிட்டுள்ள அவாது முகவரி மற்றும் மின்அஞ்சலுக்கு, மனுதாரர் அல்லது அவர்களது வழக்கறிஞர், அவர்களது முகவரியுடன் கையொப்பமிட்டு, வாய்தா தேதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதில் தங்களது எதிர்ப்புக்கான காரணங்களை விளக்கி விவரிக்கப்படவேண்டும். அதன் நகல் ஒன்றினை அவரது சுயபிரமாணப் பத்திரத்துடன் அவ்வறிவிப்பினை அனுப்பி வைக்கவேண்டும். மேலும் அதனுடைய நகலை தமிழ்நாடு – 600 001, சென்னை, ராஜாஜி சாலை, எண்.29, மூன்றாம் தளம், கார்ப்பொரேட் பவன் (UTI கட்டிடம்)–இல் அமைந்துள்ள மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திற்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் கூட்டு நிறுவன விண்ணப்ப நகல் மனுதாரர் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியிடமிருந்து செலவினங்களுக்கான குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மனுதாரர் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி
S.மஞ்சுளா தேவி,
வழக்கறிஞர்,
KSR & கோ நிறுவனச் செயலாளர்கள் LLP,
101, இண்டஸ் சேம்பர்ஸ், அரசு கலைக் கல்லூரி ரோடு,
கோயம்பத்தூர் – 641 018.
மின் அஞ்சல் : legal@ksrandco.in

தேதி : 25.03.2026
இடம் : கோயம்புத்தூர்

RITES LIMITED
(A Government of India Enterprise)
Shikhar, Plot No.1, Sector-29, Gurugram-122001
CIN : L74899DL1974GOI007227

RITES
THE INFRASTRUCTURE PEOPLE

Requires hard working professionals on Regular Basis for the following post(s)/discipline through Written Test/Interview at RITES Offices.

VC Nos.	Posts	Positions
193-R3/24	Group General Manager (HR)	01
RG/05/26	DGM (Legal)	01
RG/06/26	Assistant Manager (Legal)	04
RG/08-R1/25	Assistant Manager (Finance)	11
RG/07/26	Assistant (HR)	15

For complete details, candidates may see the detailed advertisement posted on RITES website **www.rites.com** under Career Section.

VISTAAR FINANCE
விஸ்டார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம் - ப்ளாட் எண். 59 & 60 - 23, 22 வது குறுக்கு,
29 வது மெயின், BTM 2 வது ஸ்டேஜ், பெங்களூரு - 560 076
www.vistaarfinance.com

பிற்சேர்க்கை IV (பார்க்க விதி 8(1))

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், விஸ்டார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ன் கீழும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க - 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் படி தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தியும், கடன்தாரர்(கள்) திரு வினோத்குமார் மாரியப்பன் மற்றும் திருமதி மாரியப்பன் சுப்ரமணிய நாடார் ஆகியோருக்கு, 15.11.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பியழைத்து, அதில் குறிப்பிட்டுள்ள கடன் கணக்கு எண். 0056SBML02464 க்கு எதிரான 06.11.2024 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 46,66,288.92/- (ரூபாய். நாற்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து இருநூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா தொண்ணூற்று இரண்டு மட்டும்) மற்றும் உண்மையில் பணம் செலுத்தப்படும் வரை மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் நிகழ் செலவுகள் ஆகியவற்றை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர்(கள்) அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்(கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் படி 2026 ம் வருடம் மார்ச் மாதம் 20 ம் தேதியன்று சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு [illegible] ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், விஸ்டார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் - க்கு செலுத்தப்பட வேண்டிய 06.11.2024 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 46,66,288.92/- (ரூபாய். நாற்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து இருநூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா தொண்ணூற்று இரண்டு மட்டும்) மற்றும் உண்மையில் பணம் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழான ஏற்பாடுகளின் படி, கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம் -

பழனி பதிவு மாவட்டம், பழனி தாலுக்கா, பழனி இணை II சார் பதிவு மாவட்டம், பழனி டவுன், ராஜாஜி சாலை, வார்டு எண். 4, பழைய T.S. எண். 385 ல் அமையப்பெற்ற 8955 சதுர அடி, புதிய சர்வே எண். 87/5 ல் உள்ள 330.50 சதுர அடி பரப்பளவு கொண்ட அசையா சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன பின்வருமாறு - (மேற்கு) : T.S. எண். 383/1 பழைய தாராபுரம் சாலை, (கிழக்கு) : T.S. எண். 385 சுலோச்சனா சொத்து, (தெற்கு) : T.S. எண். 385 தங்கதுரை நாடார் வீடு, (வடக்கு) : T.S. எண். 385 மோகன்ராஜ் மற்றும் பிறர் வீடு. இதன் மேற்கண்ட நான்கு எல்லைகளுக்கு மத்தியில் உள்ள 330.50 சதுர அடி மற்றும் அதனுடன் கூடிய பாதை மற்றும் இதர உரிமைகள் முழுவதும்.

தேதி : 20.03.2026
இடம் : பழனி

ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
விஸ்டார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

இந்தியன் வங்கி Indian Bank
இலாகாபாத் ALLAHABAD

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை
100-101, கிழக்கு ஆவணி மூல வீதி,
மதுரை - 625001.

பிற்சேர்க்கை - IV-A" [பார்க்கவும் விதி 9(1)இன் ஷரத்துகள்]

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனிட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-ஷரத்துகளின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த இந்தியன் வங்கி, மதுரை கிளை அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ளது என்னவோ அது" எனும் முறையில் ஈடு பெற்றுக் கடனளித்த இந்தியன் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்துகள் மேலாண்மை மதுரை கிளைக்கு வரவேண்டிய 17.03.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ரூ. 10,21,20,443.95 (ரூபாய் பத்து கோடியே இருபத்து ஒரு லட்சத்து இருபதாயிரத்து நானூற்று நாற்பத்து மூன்று மற்றும் தொண்ணூற்று ஐந்து பைசா மட்டும்) M/s சிஸ்தி லெதர்ஸ், எண் 17, ஊத்துக்காட்டான் தெரு, பெரியமேடு, சென்னை-600003. திருமதி. ரஹிலா பேகம் முகமது ஷேக் (உரிமையாளர்), க/பெ : முகமது ஷேக், உரிமையாளர் - M/s சிஸ்தி லெதர்ஸ், எண் 97/5 விரிவாக்கப் பகுதி, வேளாங்கண்ணி தெரு, மேட்டுப்பட்டி, பேகம்பூர், பள்ளிப்பட்டி, திண்டுக்கல்-624002. திரு. முகமது ஷேக் முகமது ஹனிஃபா (ஜாமீன்தாரர்), த/பெ : முகமது ஹனிஃபா, எண் 97/5 விரிவாக்கப் பகுதி, வேளாங்கண்ணி தெரு, மேட்டுப்பட்டி, பேகம்பூர், பள்ளிப்பட்டி, திண்டுக்கல் -624002.. ஆகியோரிடம் இருந்து வசூலிக்கும்பொருட்டு 17.04.2026 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

மின் - ஏலம் மூலம் விற்பனைக்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள சொத்தின் குறிப்பான விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

சொத்தின் விரிவான விபரம்	திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார் பதிவு மாவட்டம், ஆத்தூர் வட்டம், பிள்ளையார்நத்தம் கிராமம். இச்சொத்து 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; இதில் 4-வது பகுதியாக, சர்வே எண்கள் 141/2A, 141/2B & 141/3-ல் 36,727 1/2 சதுர அடி பரப்பளவும்; 5-வது பகுதியாக, சர்வே எண்கள் 141/2A, 141/2B & 141/3-ல் 37,815 சதுர அடி பரப்பளவும் அமைந்துள்ளது. ஆக மொத்தம், ஏக்கர் 3.56 செண்ட் பரப்பளவில் அடங்கிய 74,542 1/2 சதுர அடி மொத்தப் பரப்பளவு இது திருமதி. M. ரஹிலா பேகம், க/பெ திரு. முகமது ஷேக் அவர்களுக்குச் சொந்தமானது (காலியிடம்). **எல்லைகள்: வடக்கு:** சர்வே எண் 141/2A-இல் அமைந்துள்ள சொத்து (இனம் எண் 2), **கிழக்கு:** 10 அடி அகல தெற்கு-வடக்கு சாலை மற்றும் பள்ளப்பட்டி கிராம எல்லைக்கோடு மற்றும் தெற்கு-வடக்கு சாலை **தெற்கு:** சர்வே எண்கள் 141/4 & 5-இல் அமைந்துள்ள சொத்து, **மேற்கு:** சர்வே எண்கள் 135 & 142-இல் அமைந்துள்ள சொத்து.
சொத்தின் மீது வில்லங்கம்	இல்லை
குறைந்தபட்ச கேட்பு விலை	ரூ.210.00 லட்சம்
டேவணித்தொகை	ரூ.21.00 லட்சம்
ஏல உயர்வுத்தொகை	ரூ.10,000/-
மின்-ஏல நாள் மற்றும் நேரம் https://www.ebkray என்ற மின் ஏல சேவை வழங்குநர் தளத்தில் நடக்கவுள்ள மின்-ஏல நாள் மற்றும் நேரம்	நாள்: 17.04.2026, நேரம்: காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
சொத்து அடையாள எண்.	IDIBH6616380944A

இணைய வழி ஏலத்தில் கலந்து கொள்ள எங்கள் மின்-ஏலச் சேவை வழங்குநரான PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தின் (https://www.baanknet.com) இணையத்தளத்தை அணுகுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிகளுக்கு அழையுங்கள்: 8291220220 பதிவு செய்து கொண்ட நிலவரம் மற்றும் டேவணித்தொகை (EMD) செலுத்தியது நிலவரம் தொடர்பான விவரங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புக : support.ebkray@psballiance.com

சொத்து விவரங்களுக்கும் சொத்தின் புகைப்படத்துக்கும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் தயவுகூர்ந்து விஜயம் செய்க: https://www.baanknet.com மேலும் இந்த இணையத்தளம் தொடர்பான விவரங்களுக்கு தயவுகூர்ந்து PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டிய உதவி எண்: 8291220220

https://www.baanknet.com இணையத்தளத்தில் சொத்தை தேட மேலே குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணைப் பயன்படுத்துமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நாள்: 18.03.2026
இடம்: மதுரை
அதிகாரப்பூர்வ அலுவலர்

QR குறியீடு

மின் -ஏல வலைத்தளம்	ஆவணம் (விற்பனை அறிவிப்பு படம்)	சொத்து அமைவிடம்	சொத்து புகைப்படங்கள்	சொத்து காணொலி

தொடர்பு நபர்: திரு.G.பிரேம்குமார் - 94421 53709 (அதிகாரப்பூர்வ அலுவலர் / கிளை மேலாளர்)

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

பேங்க் ஆஃப் பரோடா, திண்டுக்கல் மெயின் கிளை
எண்.23, புதிய அக்ரஹாரம், பழனி சாலை, திண்டுக்கல் - 624001,
தொலைபேசி எண்: 0451-2431839 & 2431290,
செல். 9489205933

மின்னணு ஏல அறிவிப்பு

பின்னிணைப்பு-E [நாளிதழ் வெளியீட்டுக்கான சுருக்கப்பட்ட விற்பனை அறிவிப்பு] அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு இணைப்பு-IV-A [பார்க்க விதி 6(2) & 8(6)]

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம்' 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த **பேங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

வ / லாட் எண்.	கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	17-03-2023 தேதியின்படி மொத்த நிலுவைகள் அசையா சொத்தின் சுருக்கமான விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றுடன்)	மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் குறைந்தபட்ச விலை முன்வைப்புத்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை	சொத்து ஆய்வு தேதி & நேரம் சுவாதீன நிலை (அடையாள / நேரடி சுவாதீனம்)
1.	M/s. ஷஷ்வினா டிரேடர்ஸ் உரிமையாளர் திரு.வீராசாமி மும்மாச்சி (கடன்தாரர்)	ரூ. 15,29,156.53/- + மேலும் வட்டி மற்றும் அதன் மீதான பிற கட்டணங்கள். சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், குடியிருப்புக் நிலம், ச.எண்.375/6, பட்டா எண்.2453, கதவு எண்.2/159, வெள்ளபொம்மன்பட்டி, வேல்வார் கோட்டை கிராமம், வடமதுரை பஞ்சாயத்து யூனியன், வடமதுரை SRO, பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம் என்ற முகவரியில் 731 சதுர அடியில் குடியிருப்பு கட்டிடம் உடையது. திருமதி.V.தனலட்சுமி W/O. திரு.வீராசாமி பெயரில் உள்ளது.	30.04.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை குறைந்தபட்ச விலை: ரூ.18.92 லட்சம் முன்வைப்புத்தொகை - ரூ.1.90 லட்சம் ஏல உயர்வுத்தொகை - ரூ. 50,000/-	23.04.2026 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை நேரடி சுவாதீனம் SCAN HERE

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.in/e-auction மற்றும் Baanknet.com - ல் உள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும். மேலும், உத்தேசித்துள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அலுவலர் மற்றும் அலைபேசி எண் : 9489205933ல் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 23.03.2026
இடம் : திண்டுக்கல்
அதிகாரப்பூர்வ அலுவலர்

sf சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) – சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

அ. SWP-இன் கீழ் அரையாண்டு மற்றும் வருடாந்திர கால இடைவெளியை அறிமுகப்படுத்துதல் - நிலையான தொகை மற்றும் மூலதன மதிப்பு உயர்வு விருப்பம்:

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் அறங்காவலரான சுந்தரம் டிரஸ்டி கம்பெனி லிமிடெட், சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் பொருந்தக்கூடிய அனைத்து திட்டங்களிலும், **சிஸ்டமேட்டிக் வித்ட்ராவல் பிளானில் (SWP)** பின்வரும் கூடுதல் கால இடைவெளிகளை 30/03/2026 முதல் அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை முதலீட்டாளர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

SWP-இல் இருக்கும் தற்போதுள்ள இடைவெளிகள்	SWP-இல் முன்மொழியப்பட்ட இடைவெளிகள்
மாதாந்திர மற்றும் காலாண்டு	மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு & வருடாந்திரம்

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் SID மற்றும் KIM ஆகியவற்றில் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

ஆ. புதிய வாடிக்கையாளர் பராமரிப்பு மையம் திறப்பு:

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் மார்ச் 25, 2026 முதல் செயல்படும் KFin Technologies Limited இன் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியைக் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இது சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கான அதிகாரப்பூர்வ மையமாகும்:

கிளை	முகவரி
திருப்பூர்	Kfin Technologies Limited, 22/1, பின்னி காம்பவுண்ட் மெயின் ஸ்ட்ரீட், பாலாஜி லேஅவுட், கண்ணபிரான் காலனி, பின்னி காம்பவுண்ட், திருப்பூர் - 641 601. தமிழ்நாடு. Email Id: mfstirupur@kfintech.com ✆ தொலைபேசி: +91 0421 4102129

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தப் இணைப்பு அவ்வப்போது திருத்தப்படுகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: மார்ச் 25, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.